

### தாமான் மலூரியில் டிபிகேஎல் அதிரடிச் சோதனை

# பொருட்கள் பறிமுதல்

கோலாலம்பூர், ஜூலை 11-
நேற்று முன்தினம் தாமான் மலூரி பகுதியில் வியாபாரிகள் வைத்திருந்த தடுப்புகளை அப்புறப் படுத்தி கோலாலம்பூர் மாநகர் மன்ற தரப்பினர் (டிபிகேஎல்) பொருட் களை பறிமுதல் செய்தனர். தித்தி வங்சா டிபிகேஎல் அலுவலக, அமலாக்க பிரிவினர் இந்த சோதனையை மேற்கொண்டனர். ஜாலான் ஜெஜக்கா 7, 9 பகுதிகளில் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகள் இந்த சோதனைக்கு உட்படுத்தப் பட்டனர். 1974 கட்டட சாலை சட்டம் பிரிவு 46(1) (டி) கீழ் சிறப்பு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் செராஸ் ஜாலான் லோம்போக்கில் உள்ள டிபிகேஎல் கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன.

கோலாலம்பூர் கூட்டரப் பிரதேசத்தில் உள்ள 11 நாடாளுமன்றத் தொகுதிகளில் சிறப்பு நடவடிக்கைகள் வாயிலாகக கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் டிபிகேஎல் தரப்பு குறிப்பிட்டுள்ளது.